1987 ஏப்ரல் 2]

அம்பா சமுத்திரம் இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்

249—(* வினா எண் 5678) திரு. எஸ். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரத்திலுள்ள இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எஸ். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம், அதைச் சுற்றியுள்ள 60,70 கிலோ மீட்டருக்குத் தாண்டித்தான் இந்த நீதிமன்றம் உள்ளது. ஏழை எளிய மக்கள் வழக்குக்குச் செல்ல வேண்டி வர்தால் மிகவும் சிரமப்பட்டுக் செல்ல வேண்டியதோடு முதல் நாளே செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே இதையெல்லாம் கருத்தில் கொண்டு அம்பாசமுத்திரம் பகுதியில் அந்த முதல் வகுப்பு நீதி மன்றத்தை உருவாக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, சேரன்மாதேவியில் ஒரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பை உயர்நீதி மன்றத்தில் இருந்து அரசுபெற்றிருக்கிறது. அம்பாசமுத்திரத்தை பொறுத்த வரையில் உயர்நீதிமன்றத்தோடு கலந்து ஆலோசித்துப் பிறகு அரசு பரிசீலிக்கும்.

திரு. எஸ். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றி. அதை இந்த ஆண்டே அனுமதிக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தினுடைய செயற்குறிப்பைப் பெற்ற பிறகு அது குறித்து அரசுபரிசீலிக்கும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மாதேவியில் முன்சீப் கோர்ட் ஆரம்பிக்கப்படும்ச் விவரங்களைச் சொன்னார்கள். முன்சீப் கோர்ட்டுக்குப் பதிலாக எஸ்.டி.எம். கோர்ட்டை அமைக்கும் செயற்குறிப்பை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, அது குறித்தும் பரிசீலித்து வருகிறது.